எம்.சி.ஓ.பி. 21/2016 எ.ம.சா.1. கே. முருகன், த/பெ கண்ணன்

**<u>12.10.2023 குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**.......

8. விபத்தில் சம்மந்தப்பட்ட TN 25 AT 5685 என்ற வாகனம் எங்கள் காப்பீட்டு நிறுவனத்தில் தான் காப்பீடு செய்ப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி வாகனமான TN 25 AT 5685 சம்மந்தப்பட்ட வாகனத்தின் பதிவு சான்று ம.சா.ஆ.2 ஆகவும், அதற்குரிய காப்பீட்டு பாலிசி ம.சா.ஆ.3 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

9. TN 25 AT 5685 என்ற வாகனத்தின் ஓட்டுனருக்கு விபத்து சமயத்தில் ஓட்டுனர் உரிமம் இருந்தது என்றால் சரிதான். விபத்து யாருடைய அஜாக்கிரதையினால் ஏற்பட்டது என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். விபத்தில் சம்மந்தப்பட்ட TN 25 AT 5685 என்ற வாகனத்தின் ஓட்டுனரின் அஜாக்கிரதையினால் இந்த விபத்து ஏற்பட்டுள்ளதால் அந்த வாகனம் எங்கள் காப்பீட்டு நிறவனத்தில் காப்பீடு செய்யப்பட்டிருந்ததால் மனுதாரருக்கு இழப்பீடு வழங்க எங்கள் காப்பீட்டு நிறுவனம் தான் கடமைப்பட்டது என்றால் சரியல்ல. மனுப்படி தீர்ப்பாக வேண்டுமென்றால் சரியல்ல.